பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

சுடர் 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 19 வெள்ளிக்கிழமை (04-12-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 08

# இராணுவத்திற்குள் கிளர்ச்சி தற்காலிகமாகத் தவிர்ப்பு!

## அதனைக் கருதியே அரசாங்கம் சர்வதேச விசாரணைக்கு இணக்கம்

கொழும்பு, டிசம்பர் 4

ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்குள் ஏற்பட இருந்த கிளர்ச்சி ஒன்று தவிர்க்கப்பட்டிருப்பதாக, தடுக்கப்பட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

தளபதி டென்சில் கொப்பேகடுவவின் மரணம் குறித்து விசாரணை நடத்துவதற்கு சுயேச்சையான சர்வதேச நீதி விசாரணைக் குழுவை நியமிக்க இணக்கம் தெரிவித்ததன் மூலம், இராணுவத்திற்குள் ஏற்பட இருந்த கிளர்ச்சியை அரசு தடுத்துவிட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் வேலணை அராலிக் கண்ணி வெடியில் தளபதி டென்சில் கொப்பேகடுவவும் மற்றும் எட்டு உயர் அதிகாரிகளும் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கப் படையினரின் மனோவலிமை பெருமளவில் குன்றிவிட்டது.

அதிகாரிகளின் கொலையில் அரசாங்கத்திற்கும் பங்கிருக்கலாம் என்ற கருத்தும், படையினரின் நலன்கள் கவனிக்கப்படுவதில்லை என்ற கவலையும் படையினர் மத்தியில் மேலோங்கி இருந்தது.

இதேவேளை படையினரின் உயர் அதிகாரிகள் மட்டத்திலும் கருத்து முரண்பாடுகளும் அதிகாரப் போட்டியும் நிலவுகின்றன. படையினரின் கீழ் மட்டத்தில் மனோ வலிமை குன்றியதைச் சாதகமாகப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### அத்துமீறிய குடியேற்றம்:

## வவுனியாவில் 1000 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன

வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் அத்துமீறிய குடியேற்றங்களைச் செய்ய ஏதுவாக சுமார் ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட்டுவருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

மகாறம்பைக் குளம், வீரபுரம், முதலியார் குளம் ஆகிய இடங்களிலேயே இந்த வீடுகள் அமைக்கப்பட்டுவருகின்றன.

தமிழர்களின் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இந்தத் திட்டமிட்ட குடியேற்ற நடவடிக்கைக்காக சுவீகரிக்கப்பட்டுள்ளன. (இ-5)

### ஜி. சீ. ஈ. சாதாரண பரீட்சை

## அடையாள அட்டை இல்லாத மாணவர் அவல நிலையில்!

### அதிகாரிகளிடையே முரண்பாடு!!

யாழ்ப்பாணம், டிச. 4

எதிர்வரும் 7 ஆம் திகதி ஆரம்பமாகும் ஜி. சீ. ஈ. (சாதாரண)தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களில் அடையாள அட்டை கிடைக்காத பரீட்சார்த்திகள் பெரும் அவல நிலையில் உள்ளனர்.

தபாலகங்கள் மூலம் வழங்கப்படும் அடையாள அட்டைக்கான வெற்று அட்டைகள் கொழும்பில் இருந்து கிடைக்காததால், தபால் நிலைய அதிபர்கள் அத்தாட்சிப்படுத்தும் மாணவர்களின் புகைப்படத்தை அடையாளச் சான்றாக ஏற்று பரீட்சை எடுக்க அனுமதிக்குமாறு பிரதி தபால் மா அதிபர் திரு. எஸ். எம். சேதுகாவலர் அறிவித்திருந்தார்.

ஆனால் இந்த நடைமுறை சாத்தியப்படாது என்று கல்விப் பணிப்பாளர் நேற்றுத் தெரிவித்தார்.

தபால் அதிபர்கள் அத்தாட்சிப்படுத்தும் புகைப்படங்களை ஏற்குமாறு பரீட்சை ஆணையாளரிடம் இருந்து எந்தவித பணிப்புரையும் தமக்கு கிடைக்காததால், அதனை ஏற்கமுடியாது என்றும் பணிப்பாளர் கூறினார்.

வழமையான நடைமுறை

[8 ஆம் பக்கம் பார்க்க]

### பருத்தித்துறை - கொழும்பு

## பயணிகள் கப்பல் சேவை: உடன் சாத்தியம் இல்லை

பருத்தித்துறை - கொழும்பு பயணிகள் கப்பல் சேவையை உடனடியாக ஆரம்பிக்கும் சாத்தியக்கூறு இல்லை என்று தெரியவந்தது.

இந்தக் கப்பல் சேவையை நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கூட்டுப்படைத் தலைமையகம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் கேட்டிருந்தது.

அதை அடுத்து கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் இலங்கை பிரதிநிதி திரு. டொமினிக் டுவேசர் கப்பல் சேவை குறித்து விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள், யாழ். அரச அதிபர் ஆகியோருடனும், பலாலியில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி குலதுங்காவுடனும் பேச்சுக்கள் நடத்தினார் என அறிய வந்தது.

கப்பலில் செல்வோர் பற்றிய விவரங்களை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவால் உறுதி செய்ய முடியாது என்றும், கப்பல் சேவை குறித்து அரசாங்கமே முடிவு செய்யவேண்டும் என்றும் செஞ்சிலுவை அதிகாரி சம்பந்தப்பட்டவர்களிடம் எடுத்துக் கூறியதாகவும் தெரிய வந்தது. [இ-3]

## வினாத்தாள்கள் வந்தன

யாழ்ப்பாணம், டிச. 4

எதிர்வரும் 7 ஆம் திகதி ஆரம்பமாக இருக்கும் ஜி சீ ஈ சாதாரணதரப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்று விமானம் மூலம் பலாலிக்கு எடுத்து வரப்பட்டன.

கொழும்பில் இருந்து பலாலிக்கு வந்துள்ள வினாத்தாள்கள் நேற்று காங்கேசன்துறைக்கும் கொண்டு செல்லப்பட்டிருந்தன என்றும் — அவை இன்று 'குமண' கப்பல் மூலம் காங்கேசன்துறையில் இருந்து பருத்தித்துறைக்கு எடுத்து வரப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் நேற்றிரவு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை இந்த வினாத்தாள்களுடன் ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளும் எடுத்துவரப்பட்டிருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-5)

### மதகுரு, ஆசிரியர், பெற்றோர் ஒன்று கூடி

## பரீட்சைக்குத் தோற்றும் மாணவருக்கு ஆசி வழங்கல்

யாழ்ப்பாணம், டிச. 4

மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலையில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு ஆசி வழங்கும் சிறப்பு நிகழ்ச்சி ஒன்று இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த ஆசி வழங்கும் வைபவத்தில் எதிர்வரும் ஏழாம் திகதி ஆரம்பமாக இருக்கும் ஜி. சீ. ஈ. சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு அவர்கள் பரீட்சையில் திறமையுடன் சித்திபெறுமாறு, அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்கள், சமய குருமார்கள், பெற்றோர்கள், ஆகிய முத்தரப்பினரும் வாழ்த்தி ஆசி வழங்குவார்கள்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி சென்ற செஞ். அதிகாரிகள் திரும்பினர்

யாழ்ப்பாணம், டிச. 4

பலாலியில் தடுத்துவைக்கப்பட்டுள்ளோரின் நலன்களைக் கவனிக்கச் சென்ற செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் குழு நேற்று யாழ்ப்பாணம் திரும்பியது.

தடுத்து வைக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கொடுத்த கடிதங்களை சம்பந்தப்பட்டவர்களிடம் கையளித்து விட்டு அவர்களிடம் இருந்து உறவினர்களுக்கான கடிதங்களும் எடுத்துவரப்பட்டுள்ளன. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமறைக் கலாமன்றம்
### வழங்கும்

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான

# ★ வளையாபதி ★

### இசைநாடகம்

**05–12–92 (சனி)** மாலை **6.30** மணி

இடம்:- 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
முன்கூட்டியே ஆசனம் பதிவு செய்து கொள்ளலாம்.
(சி/3946)

---

## சனசமூக நிலையங்களின் கவனத்திற்கு

சகல சனசமூக நிலையங்களையும் 1993 ஆம் ஆண்டுக்கான நிர்வாகிகளை வழமையான நடைமுறைக்கேற்பக் கட்டாயமாக 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தெரிவு செய்து, விபரங்களை எனது காரியாலயத்திற்கும் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன். 1993 ஆம் ஆண்டிற்கான நன்கொடைக் கொடுப்பனவிற்கு இது மிக அவசியமான தாகும்.

சுந்தரம் டிவகலாலா
பி. உ. உ. ஆணையாளர், யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
03-12-1992. [C / 3948]

---

### வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
(நீர்வேலி, கோப்பாய், உரும்பராய், புத்தூர், அச்சுவேலி உப அலுவலகங்கள்)

வரியிறுப்பாளருக்கு,

**1987-ம் ஆண்டின் 15 ஆவது இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 41ஆவது பிரிவின் கீழ் 1993ம் ஆண்டிற்கான ஆதன வரி பற்றிய**

# அறிவித்தல்

1993 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி கடந்த வருடாந்த மதிப்பீட்டின்படி அறவிடப்படும் தற்போது அமுலிலுள்ள ஆதனவரி அறவீட்டு விகிதமே எதிர்வரும் ஆண்டும் மாற்றமின்றி அமுல் செய்யப்படும். ஆண்டு முழுவதற்குமுரிய வரித்தொகையை ஜனவரி 31ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 10% கழிவும் 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் கந்தாயங்களுக்குரிய கட்டணத்தை முறையே ஜனவரி 31ஆம், ஏப்ரல் 30ஆம், ஜூலை 31ஆம், அக்டோபர் 31ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 5% கழிவும் வழங்கப்படும்.

1ஆம் கந்தாய வரி மார்ச் 31ஆம் திகதிக்கு முன்பும்.
2ஆம் கந்தாய வரி ஜூன் 30ஆம் திகதிக்கு முன்பும்
3ஆம் கந்தாய வரி செப்டம்பர் 30ஆம் திகதிக்கு முன்பும்
4ஆம் கந்தாய வரி டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்பும் செலுத்தப்படல் வேண்டும். செலுத்தத் தவறும் வரியிறுப்பாளர்கள் மீது குடியிருப்பு ஆதனமாயின் 15%மும் வியாபார நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் ஆதனமாயின் 20%மும் மற்றாணைச் செலவாக அறவிடப்படும்.

ஆகவே வரியிறுப்பாளர்கள் நிலுவையின்றி உரிய காலங்களில் பணத்தைச் செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு கனிவன்புடன் வேண்டப்படுகின்றார்கள்.

மேலும் 1992ஆம் ஆண்டு முடிய மின்சார வரி நிலுவைகளையும், வியாபார உரிமக் கட்டணங்கள் மற்றும் வண்டி, துவிச்சக்கர வண்டி வரி என்பனவற்றையும் நிலுவையின்றி செலுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

கந்தையா கனகரெத்தினம்,
விசேட ஆணையாளர்,
வலி. கிழக்குப் பிரதேச சபை.

நீர்வேலி,
1992 - 11 - 25 (இ/3945)

---

## பவள விழா

யாழ்ப்பாணக் கல்லூரி சாரணர் குழுவின் பவள விழா மலர் வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரி ஒட்லி மண்டபத்தில் நடைபெறும். (ஓ-5)

## நினைவு தின விழா

கூட்டுறவுத் தந்தை வீரசிங்கம் அவர்களின் 28 ஆவது ஆண்டு நினைவு தின விழா நாளை 5ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும். [இ-162]

## மகா கும்பாபிஷேகம்

துனைக்கோட்டை அருள்மிகு கரைப்பிராய் ஆதிவிநாயகர் ஆலய உற்சவமூர்த்தி விநாயகப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகிறது. நண்பகல் 12 20 முதல் நடைபெறும் மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நூல் வெளியீட்டு விழாவும், ஸ்தபதி பட்டமளிப்பு விழாவும் இடம்பெறும்.

பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் ''சந்தியா வந்தனம்'' நூல் வெளியீட்டு விழாவுக்கு கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் தலைமை வகிப்பார்.

அதனைத் தொடர்ந்து ஸ்தபதி க. சிவராஜா சிற்ப சாஸ்திர பிரவீணா என்ற பட்டம் அளித்துக் கௌரவிக்கப்படுவார். நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஸ்தபதிக்குப் பட்டமளிப்பார். (ஓ-5)

### அறிவுக் களஞ்சியம்

கடந்த ஆறு மாதங்களாக யாழ்ப்பாணத்திலிருந்து அறிவுக் களஞ்சியம் என்ற ஒரு வெளியீடு மாதந்தோறும் வந்து கொண்டிருக்கின்றது. ஊர் நடுவே பழுத்த நல்மரம் இது. எங்கள் நாட்டிலுள்ள சிறந்த அறிஞர்கள் இவ்வெளியீட்டில் கட்டுரைகளை எழுதி வாசகர்களுக்கு விருந்தளிக்கிறார்கள். இன்றைய நெருக்கடிகள் நிறைந்த சூழ் நிலையிலும் இத்தகைய ஒரு சிறந்த வெளியீட்டை வெளியிட்டு, அதையும் இலாப நோக்கின்றி பத்தே பத்து ரூபாய்க்கு விற்பனை செய்யும் வரதர் வெளியீட்டினருக்கு தமிழ் மக்கள் கடமைப்பட்டுள்ளார்கள்.

— ஒரு தமிழன்பன்
(இ/3845)

---

# 93-O/L,
## ஆண்டு 10

ஆரம்பம்: 05-12-92
சனி: பி. ப 3-00 மணி

சகல பாடங்களும் திறமையான ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும்.

**SHAMROCK**
யாழ். சுண்டுக்குளி
(23495)

---

## பரீட்சைக்குத் தோற்றும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகல் 2.30 மணிக்கு நடக்கவிருக்கும் இச் சிறப்பு நிகழ்ச்சிக்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக பாடசாலை அதிபர் திரு. அ. மு. அருணாசலம் தெரிவித்தார்.

இவ் விழாவில் மருதனார்மடம் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். சிவானந்தன் உட்பட பல சமய, சமூகப் பிரமுகர்களும் கலந்து கொள்வர். (அ)

---

### யாழ்ப்பாணக் கல்லூரி சாரணர் குழு
## பவளவிழா மலர் வெளியீடு

காலம்:- **4 — 12 — 1992** இன்று பி. ப. **2.30** மணி
இடம்:- 'ஒட்லி அரங்கம்' யாழ். கல்லூரி
தலைவர்:- எஸ். கேசவன்
சிறப்பு விருந்தினர்கள்:-
திரு. பேபி சுப்பிரமணியம் அவர்கள்
திரு. இ. மகேந்திரன் அவர்கள்

**விசேட நிகழ்ச்சிகள்**

1. கவியரங்கம் ''புதியதோர் உலகம் செய்வோம்''
தலைவர் – நாவண்ணன்
திரு. ஜெ. கி. ஜெகசீலன் திரு. வேல்தஞ்சன்
திரு. எம். பி. அருளானந்தம் திரு. கா. திருப்பரங்குன்றன்
2. நாடகம் ''மண்ணின் வழி''
3. மற்றும் சில கலை நிகழ்வுகள்

அன்பர்கள், நண்பர்கள், சாரண சகோதரர்கள், எமது பழைய சாரணர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

நன்றி.

சாரணர் குழு.

யாழ். கல்லூரி,
வட்டுக்கோட்டை. (இ-3947)

---

# MATHS CENTRE
## NELLIADY

**A/L** 94 சனி
★ காவிகள் a. m 6.15
★ நுண்கணிதம் a. m 8.00
நடைபெறுகிறது.
ஆசிரியர்: அருளானந்தம்
(5621)

---

# MATHS CENTRE
## NELLIADY

கல்வியாண்டு 93 க்குரிய
புதிய வகுப்புக்கள்
ஆண்டு: 4, 5, 6, 7, 8, 9, 10, 11
ஆரம்பம்: 05 - 12 - 92
சனிக்கிழமை p. m. 2-15
(சி/5622)

---

## நன்றி கூறுகின்றோம்

### V. சாமுவேல் B. A.
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

சென்ற 18-11-92 இல் காலமான எமது அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்கள், மலர் வளையங்கள் வைத்தவர்கள், அவர் நோயுற்றிருக்கும்போது ஆறுதல் கூறியோர், சக ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் எமக்கு பல விதத்திலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்.

மனைவி, சகோதரர்கள்.

உரும்பராய். (5623)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறிய குடும்பங்களைச் சேர்ந்த

# குழந்தைகளுக்கு பால்மா இலவசமாக விநியோகம்

## சமூகசேவைத் திணைக்களம் நடவடிக்கை

வலிமேற்கு, டிச. 4

யாழ். மாவட்டத்திலுள்ள வறுமை நிவாரண உணவு முத்திரை பெறும் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவசமாக பால்மா விநியோகிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஆரம்ப நடவடிக்கையாக யாழ் மாவட்டத்திலுள்ள வறுமை நிவாரண உணவு முத்திரை பெறும் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்று யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலாளர்களுக்கும் யாழ். செயலக சமூக சேவைத் திணைக்கள உதவிப் பணிப்பாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளின் விவரங்களை கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக அனுப்பி வைக்கும்படி அந்தப் பிரதேச செயலர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

வறுமை நிவாரணம் தொடர்பான ஆணையாளரின் பணிப்பிற்கிணங்கவே இந்த விவரங்கள் திரட்டப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. யாழ் மாவட்டத்திலுள்ள சுமார் ஒரு லட்சம் குடும்பங்கள் இதனால் நன்மை அடையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-175)

## இனப்பிரச்சினை தீர்வு:

# ஸ்ரீநிவாசன் யோசனைகளை ஐ.தே.க., சு.க. ஆதரிக்கும்

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் ஈ.என்.டி.எல்.எவ். எம்.பி. திரு. கே. ஸ்ரீநிவாசன் சமர்ப்பித்த யோசனையை ஆதரிப்பதென ஐக்கியதேசியக் கட்சிச் செயற்குழு முடிவு செய்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த ஐக்கிய தேசியக் கட்சிச் செயற்குழு கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

திரு. ஸ்ரீநிவாசனின் யோசனையை ஆதரிப்பது என்று சுதந்திரக் கட்சியும் தீர்மானித்துள்ளது. (த-எ)

# அநுராதபுரம் - கொழும்பு பஸ்ஸில் கிரனேட் குண்டு

அநுராதபுரத்தில் இருந்து கொழும்பு சென்று கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றை சிலாபப் பொலீஸார் மறித்துச் சோதனையிட்டபோது, கிரனேட் குண்டு ஒன்று உள்ளே இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது. (த-எ)

# தீவக மீனவர்களுக்கு 100 மீன்பிடி வள்ளங்கள்

கொழும்பு, டிச. 4

யாழ். - தீவுப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களுக்கு நூறு மீன்பிடி வள்ளங்கள் வழங்கப்படும்.

கடற்றொழில் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக கடற்படையினருடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# கட்சியின் பெயர் மாற்றம்

சென்னை, டிச. 4

புரட்சித் தலைவர் தமிழக முன்னேற்றக் கழகத்தை எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று பெயர் மாற்றம் செய்ய தேர்தல் ஆணைக்குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத் தகவலை இக்கட்சியின் தலைவர் திரு. திருநாவுக்கரசு வெளியிட்டார். (த-எ)

# சட்ட அறிஞர் சங்கம்

யாழ்ப்பாணம், டிச. 4

யாழ் மாவட்டத்திலுள்ள சட்ட அறிஞர்களை ஒன்றிணைத்து யாழ். சட்ட அறிஞர் சங்கம் என்ற அமைப்பு ஒன்று அண்மையில் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (த)

கருணாநிதி மீதான வழக்கு:

# ஆவணங்களைச் சமர்ப்பிக்க தமிழக அரசுக்கு உத்தரவு

## உயர் நீதிமன்றம் வழங்கியது

கொழும்பு, டிச. 4

தமிழக முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச் சாட்டுகள் தொடர்பான சகல ஆவணங்களையும் தம்முன் சமர்ப்பிக்குமாறு சென்னை உயர் நீதிமன்றம் தமிழ்நாடு அரசுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

எந்த அடிப்படையில், கருணாநிதி மீதான ஊழல் குற்றச் சாட்டுகளை விசாரிக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது என்பதை அறியவுமே இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருப்பதாகவும் உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# 'சார்க்' தலைவர்களின் உச்சி மாநாடு டாக்காவில்

டாக்கா, டிச. 4

சார்க் நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாடு இம்மாதம் 12 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெறும்.

சார்க் அமைப்பின் தலைமைப் பதவியை பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதா ஸியா பொறுப்பேற்கவிருக்கிறார்.

தற்போதைய தலைவரான இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸ தலைமைப் பதவியை பங்களாதேஷ் பிரதமரிடம் கையளிப்பார். (த-எ)


## ஆச்சார்யாபிஷேக அழைப்பு

(குருப்பட்டாபிஷேகம்)

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஆங்கிரச ஆண்டு கார்த்திகை மாதம் 19ஆம் நாள் [04 - 12 - 1992] வெள்ளிக்கிழமை, உத்தரட்டாதி நட்சத்திரமும், தசமி திதியும், விருச்சிக லக்கினமும் கூடிய காலை 6-00 மணிமுதல் 7-05 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

பிரம்மஸ்ரீ ப. கிருஷ்ணமூர்த்தி சர்மா
(ஆசிரியர் குருசாமி வித்தியாலயம், கைதடி.)

பிரம்மஸ்ரீ தே. தெய்வேந்திர குரு
(வரசிவனநாத தேவஸ்தானம், சாவகச்சேரி.)

ஆகியோர்களுக்கு விசேட நிர்வாண தீட்சை செய்து ஆச்சார்யாபிஷேகம் [குருப்பட்டம் வழங்குதல்] நடைபெறத் திருவருள் கூடியுள்ளமையால், அத்தருணத்திலும் முதல் நாள் இரவு நடைபெறும் கிரியைகளிலும் உறவினர்கள், அன்பர்கள், வருகை தந்து, கலந்து மகிழ்விக்குமாறு அழைக்கின்றோம்.

தீட்சாகுரு: "பிரதிஷ்டா சித்தஜோதி கிரியாசாகரம்" சிவஸ்ரீ இ. சுப்பிரமணியக் குருக்கள் - அவர்கள்

பிரதமகுரு: ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில், அரியாலை, யாழ்ப்பாணம்.

சாதகம்: சிவஸ்ரீ ஐ. ஞானக்குருக்கள் (நுணாவில்)

இடம்: கல்வயல், நுணாவில் கிழக்கு, பூர்ணா, புஷ்கலா சமேத ஹரிஹர புத்திர (ஐயனார்) ஆலயம்

செ. பஞ்சாட்சரக் குருக்கள்-
குடும்பத்தினர்.

கல்வயல்,
சாவகச்சேரி. [23475]



## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

O/L - 93
ஆண்டு 10, 9

புதிய பிரிவுகள்

ஆரம்பம்:
05 - 12 - 92
(சனி 3-00 மணி)

விஞ்ஞானம் — தயாநிதி
கணிதம் — கதிர்
ச. கல்வி — கியூபேட்
தமிழ் — பிரதீபன்
வர்த்தகம் — ஸ்ரீ
ஆங்கிலம் — சன்

(கி-8814)



## O/L DEC. 1993

வருடாவருடம் சிறந்த பெறுபேறுகளையே பெற்றுத் தரும் எமது வழமையான ஆசிரியர் குழு

| | |
|---|---|
| ★ கணிதம் | ★ விஞ்ஞானம் |
| ★ தமிழ் | ★ சமூகக்கல்வி |
| ★ ஆங்கிலம் | ★ சமயம் |
| ★ வர்த்தகம் | ★ விவசாயம் |
| ★ சித்திரம் | ★ மனைப்பொருளியல் |
| ★ சங்கீதம் | ★ நடனம் |

ஆகிய அனைத்துப் பாடங்களுக்குமான புதிய வகுப்புகளுடன்

5ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம் ஆண்டு வகுப்புகளும்

ஆரம்பம்: 05 - 12 - 1992

BOND INSTITUTES

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(கி-3936)



## NEW SCIENCE ACADEMY

எழிலகம் முன்பாக, யாழ்ப்பாணம்.

கல்வியாண்டு - 1993

ஆண்டு 9, 10, O/L

புதிய பிரிவுகள்!

ஆரம்பம்: 05 - 12 - 1992
சனி பி. ப. 3 மணி

எமது ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. கெவின்ஸ் / திரு. தங்கச்செல்வன் |
| கணிதம் | — | திரு. சதீஸ் |
| தமிழ் | — | திரு. தமிசராஜா |
| சமூகக்கல்வி | — | திரு. சன் |
| வர்த்தகம் | — | திரு. ஜீவா |
| ஆங்கிலம் | — | திரு. தெய்வதயாபரன் |

குறிப்பு:- இவ்வாண்டு இறுதிவரை வகுப்புக்கள் யாவும் இலவசமாக நடத்தப்படும்.

(கி-8839)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஜேர்மனேரியன் நாய்க் குட்டிகள்; தாய் இலங்கை. தந்தை இந்தியன், 50 நாள் ஊசி நிறைப்பட்டது. 22/2, விதானை வீதி, உச்ச மோட்டை, சுண்டிக்குளி. [5609]

### சங்கீதம் வினா - விடை

சங்கீதம் வினா - விடை (ஆண்டு 10-11) விற்பனையாகிறது; ஆக்கம் செல்வி "அநேகா" (O/L) பரீட்சையில் உச்சப் புள்ளிபெற உதவும்வழிகாட்டி. முந்நூற்றுக்கு மேற்பட்ட வினாக்களுக்கு விரிவான விடைகள். [இராக லட்சணங்கள், இசைக்குறிப்புகள் கொண்டது. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஸ்ரீசுப்பிரமணியம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (23444)

### இலவச திருமணசேவை

30 வயது, அவிட்டம், செவ்வாய் 12, சுவிஸில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. பெண்ணை அழைக்க ஒழுங்குகள் மேற்கொள்ளலாம்; நேரடித் தொடர்பு: ஞாயிறு காலையில். நு. விஜயா, யாழ்/நாச்சிமார் கோவிலடி. (23447)

கனிஷ்ட பிரசாவுரிமையுள்ள 34 வயது, செவ்வாய்க்குற்ற மற்ற, இந்து மணமகனுக்கு 30 வயதுக்குட்பட்ட அழகிய, படித்த பெண் தேவை; கொழும்பில் திருமணம் செய்யலாம்; தாயும், தப்பனும் இருவர் . சகோதரர் இருவர் பொறியியலாளர்கள். புதன் தோறும் காலை 9 மணிக்கு ஓய்வூதிய சங்கம், 74, பலாலி வீதி, திருநெல்வேலி விலாசத்திற்கு தொடர்பு கொள்க. (5619)

### தவறிவிட்டது

மெல்லிய Brown Plastic Frame உடைய மூக்குக்கண்ணாடி 21-11-92 இல் வண்ணார்பண்ணை ஐயனார் கோவில் வீதியில் தவறிவிட்டது. ஒரு பக்க கண்ணாடி உடைந்திருந்தது; கண்டெடுத்தவர்கள் ம. சரவணபவானந்தன், இல. 01, சிவப்பிரகாசம் வீதி, [Dr. Gengatharan] Dispensary க்கு முன்] எனும் முகவரியில் ஒப்படைக்கவும்; சன்மானம் வழங்கப்படும். [23483]

### திருவிளக்குப் பூஜை

திருவிளக்குப் பூஜை தத்துவமும், வழிபாடும் என்ற கைநூல் விற்பனைக்குண்டு; ரூபா 20/-, ஸ்ரீகாந்தா புத்தகசாலை, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [23467]

புதிய
உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

SPOKEN ENGLISH
By
BRITTO

புதிய பிரிவு
ஆரம்பம்!
05 - 12 - 1992
2-00 மணி.
[இ-3886]

### புலமைப்பரிசில் வகுப்புகள்

புலமைப்பரிசில் பரீட்சைக்கான ஆண்டு 4, ஆண்டு 5, புதிய வகுப்புகள் 05-12-92 சனி பி. ப. 2-00 மணிக்கு ஆரம்பமாகின்றன. பாடத்திட்டம் முழுவதும் ஆவணிக்கு முன் பூர்த்தியாக்கப்படும். பயிற்சிப் பரீட்சைகள் மாதம் மாதம் நடைபெறும்; புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [23480]

### உங்கள் குழந்தைகளுக்கு

ஆரம்பக் கல்வி பயிலும் உங்கள் குழந்தைகளுக்கு இனிய பாடல்களைப் படங்களுடன் தரும் நல்ல நூல்கள் "பூந்தோட்டம்" "ரோஜாப்பூ" ஆசிரியர் "கோப்பாய் சிவம்" பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு நன்கு பயன்படும். [23479]

### உங்கள் நண்பருக்கு

ஆண்டிறுதியில் உங்கள் நண்பர்களைப் பிரியும் போது உங்கள் அன்பை நினைவூட்ட வேண்டாமா? ஓட்டோகிராப்பில் கையெழுத்திடும் போது எழுதச் சிறந்த பொன்மொழிகளுக்கும் அன்பளிப்புச் செய்யவும் உகந்த புத்தகம். "பொறுக்கிய முத்துக்கள்" கோப்பாய் சிவம். [23478]

### சமூகக்கல்வி (O/L)

நடைபெறவுள்ள O/L பரீட்சைக்கான கடைசிநேர துரித மீட்டலுக்கு சமூகக்கல்வி/வரலாறு பரீட்சை வழிகாட்டியை வாங்குங்கள். ஒரு சொல் / வசனத்தில் வினா-விடைகள்; விலை ரூபா 21/-. ஆக்கம்; நா. மயில்வாகனம். அனைத்துப் புத்தகசாலைகளிலும், மொத்தமாக சுப்பிரமணியம் புத்தகசாலையிலும் பெறலாம். [23487]

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

### கல்வியாண்டு - 93

ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரையான வகுப்புக்கள்

ஆரம்பம்: 05-12-1992 (சனி)

**விஞ்ஞானம்**
இரா. செல்வவடிவேல்
சன்

**கணிதம்**
இந்திரன்
வாமதேவன்
லோகேஸ்வரன்

**தமிழ்/சமயம்**
பண்டிதர்
சுந்தரலிங்கம்
யோகராணி

**சமூகக்கல்வி**
வேலா
கிஷோசன்
நிர்மலா

**ஆங்கிலம்**
மகாலிங்கம்
ரவி
தர்மலிங்கம்
ரமேஸ்

**வர்த்தகம்**
நவம்

[இ-8789]

## விஞ்ஞானக் கல்வி நிலையம்

நல்லூர்.

### கல்வி ஆண்டு - 1993

புதிய பிரிவுகள்
ஆண்டு 6, 7, 8, 9, 10, O/L
ஆரம்பம்: 05 - 12 - 92 சனி பி. ப. 3-00 மணி.

எமது ஆசிரியர் குழு!

| | |
|---|---|
| விஞ்ஞானம்:- | திரு. J. J. கொலின்ஸ்<br>திரு. ராஜ்தேவன்<br>திரு. தவச்செல்வன் |
| கணிதம்:- | திரு. சதீஸ்<br>திரு. ராஜ்தேவன் |
| தமிழ்:- | திரு. தங்கராஜா<br>செல்வி வாசுகி |
| சமூகக்கல்வி:- | திரு. கோபி<br>செல்வி வாசுகி |
| வர்த்தகம்:- | திரு. ஜீவா |
| ஆங்கிலம்:- | திரு. சௌந்தரபாண்டியன்<br>திரு. நிமலன் |
| ஆங்கில இலக்கியம்:- | திரு. தெய்வதவபாலன் |

[இ-883 4]

இளங்கலைஞர் மன்ற கலாமண்டப

## திறப்பு விழாவும்

"ராக பாவம்"

## நிதியுதவி நிகழ்ச்சியும்

இடம்: மன்ற கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்: 06 - 02 - 1993 — 08 - 02 - 1993

நுழைவுச்சீட்டு:
நாள் ஒன்றுக்கு:- 500/-, 250/

பொன். சுந்தரலிங்கம்,
தலைவர்.

(இ-3920)

## YARL HALL

பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

கல்வியாண்டு - 1993
ஆண்டு 5 முதல் O/L வரை
புதிய வகுப்புகள் ஆரம்பம்: 05 — 12 — 1992
சனிக்கிழமை 3-00 மணி

ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — | S. வாமதேவன் |
| தமிழ் | — | S. கதிர்காமத்தம்பி |
| சமூகக்கல்வி | — | S. குணசிங்கம் |
| வர்த்தகம் | — | A. அகஸ்ரின் |
| ஆங்கிலம் | — | T. சௌந்தரபாண்டியன் |

[23432]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
03
—
01
—
1931

உதிர்வு:
04
—
11
—
1992



### அமரர் சங்கரன் சபாரத்தினம்

(அமரர் ஸ்ரீவள்ளியின் அன்புக்கணவரும் - கைதடிச் சந்தி, ஆரியபவான் சைவ உணவகம், செல்லப்பா ஸ்ரோர்ஸ், சிவசக்தி புடவைமாளிகை, ஆதவன் மருந்தகம், சாந்தா ஸ்ரோர்ஸ் ஆகிய ஸ்தாபனங்களின் கட்டடஉரிமையாளரும்)

அன்பின் உறைவிடமாய், அமைதியின் அணிகலனாய், பாசத்தின் பிறப்பிடமாய் எங்கள் இதயமெல்லாம் நிறைந்திருக்கும் அன்புத் தெய்வமே! உங்கள் நினைவு எங்கள் மனதைவிட்டு அகலாது;

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் கண்ணீர் மல்கி பிரார்த்திக்கும்;

அன்பின் பிள்ளைகள்: R. இந்திராணி,
S. இந்திரராஜா (சுவிஸ்சர்லாந்து).
மருமக்கள்: M. இரத்தினம், E. விஜயகுமாரி,
பேரப்பிள்ளைகள்: R. சாந்தன், E. திஜா.

கைதடிச் சந்தி, கைதடி. [23485]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கில் யுத்தம் ஒன்றை அரசு பிரகடனம் செய்யவில்லை!

## இப்படிக் கூறுகிறார் பிரதமர்

கொழும்பு, டிச. 4

வடக்கு - கிழக்கில் யுத்த நிலைவரம் ஒன்றை அரசாங்கம் பிரகடனம் செய்யவில்லை. ஆனால் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் தான் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

பிரதமரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்கா கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

போர் முனையில் உள்ள படையினருக்குப் போதுமான வசதிகளை அரசு செய்து கொடுத்துள்ளது. நாட்டைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள படையினரின் மனோபலத்தைப் பாதிக்கும் எந்த முயற்சியையும் அரசாங்கம் கண்டனம் செய்கின்றது.

பதுங்குகுழிகளில் உள்ள படையினருக்கு அரசாங்கம் வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது. போர் முனையில் உள்ள படையினருக்கு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை லீவு வழங்கப்படுகின்றது. கொழும்பு திரும்பும் படையினருக்கு போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

எம். பிக்கள், மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோருடன் நானும் போர் முனைகளுக்கு அடிக்கடி சென்று வந்துள்ளேன். எமது விஜயங்கள் குறித்து பாதுகாப்பு அதிகாரிகள் திருப்தி அடைந்துள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

சுதந்திரக் கட்சி எம். பி. ஸி. வி. குணரத்தினாவின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் இத்தகவல்களை வெளியிட்டார்.

(த-எ)

# கூட்டுறவு பயிற்சியாளரின் இடைநிறுத்திய பரீட்சை

வண்ணார்பண்ணை, டிச. 4

பொல்கொல்லைக் கூட்டுறவுக் கல்லூரியால் நடத்தப்பட்டு, 1983ஆம் ஆண்டின் பின்னர் கைவிடப்பட்ட பரீட்சைகளை மீண்டும் நடத்த, வடக்கு - கிழக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அனுமதி அளித்துள்ளதாக அறியவந்தது.

முன்னர் நடைபெற்ற சில பரீட்சைகளுக்கு தோற்றி சித்தியடைந்த மற்றும் சித்தியடையாத கூட்டுறவுப் பணியாளர் மாணவர்களும் மற்றும் வெளிவாரி பயிற்சியாளர்களும்—

இப்பரீட்சைகள் தொடர்ந்து நடைபெறாததால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இதனை ஆராய்ந்த யாழ். மாவட்டக் கூட்டுறவு சபைப் பணிப்பாளர்— இம்மாணவர்களுக்கு விசேட பரீட்சை ஒன்றை நடத்தி பாடநெறிகளைப் பூர்த்திசெய்ய சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்று— கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரூடாக, வடக்கு - கிழக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு கோரிக்கை விடுத்திருந்தார். அதனைத் தொடர்ந்தே ஆணையாளர் பரீட்சைகளை நடத்த சம்மதம் தெரிவித்துள்ளார்.

எனவே இப்பரீட்சையைப் பூர்த்திசெய்யாத பயிற்சியாளர்கள் தமது முழுவிபரங்களுடன் இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்ட கூட்டுறவு சபையுடன் தொடர்பு கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

(த-162)

## காது கேட்கும் கருவிகள்

நவாலி டிச. 4

யாழ். மாவட்டத்தில் பல்வேறு காரணங்களினாலும் காது கேட்காமல் இருப்பவர்களுக்கு காது கேட்கும் கருவிகளை தருவித்து கொடுப்பதற்கான நடவடிக்கையில் யாழ் சமூக சேவைத் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

இவற்றைப் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களின் சகல விண்ணப்பங்களும், வைத்திய அத்தாட்சிப் பத்திரங்களும் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் சமூக சேவைப் பணிப்பாளரினால் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(த-100)

## "எய்ட்ஸ்" நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

இலங்கையில் தற்போதுள்ள எய்ட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை 76 ஆக அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த முப்பதாம் திகதி புதிதாக ஒரு எய்ட்ஸ் நோயாளி கொழும்பில் கண்டுபிடிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## திருட்டு

தென்மராட்சி, டிச. 4

சங்கத்தானை, பெரிய அரசடியிலுள்ள கராஜ் ஒன்றில் வாகன டயர்கள் உட்பட பல பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இத்திருட்டு தொடர்பாக சாவகச்சேரி காவல் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (த - 117)

## சஞ்சிகை வெளியீடு

அளவெட்டி, டிச. 4

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் தமிழ் மன்றம் தமிழ் தளிர் என்னும் கையெழுத்துச் சஞ்சிகை ஒன்றை அண்மையில் வெளியிட்டு வைத்தது. (த-13)


## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

கல்வி ஆண்டு - 1993

O/L EVENING CLASSES (3-00 — 6-00)
SAT. & SUN. CLASSES (8-00 — 3-00)

ஆண்டு - 10, 9, 8, 7, 6

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. J. R. சூரி |
| கணிதம் | — | திரு. ஜெகன் |
| ஆங்கிலம் | — | திரு. விஸ்வநாதன் |
| சமூகக்கல்வி | — | திரு. கோபி |
| தமிழ் | — | திரு. சிவா |
| வர்த்தகம் | — | திரு. கருணாகரன் |
| சமயம் | — | திரு. சேகர் |

ஆரம்பம்: 05 - 12 - 1992 (சனி)
மாலை 3 - 00 மணி

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
[இ-3803]

## BITSMANS கல்வி நிறுவனம்

மானிப்பாய்.

93ஆம் கல்வி ஆண்டுக்கான
O/L ஆண்டு 10ஆம், 9ஆம்
8ஆம், 7ஆம், 6ஆம், 5ஆம், 4ஆம்

ஆண்டுக்குரிய சகல பாடங்களும் எமது வழமையான "Super Grade" ஆசிரிய குழுவினரால் ஆரம்பமாகின்றன.

★ விஞ்ஞானம்: K. விக்கி, J. R சூரி, ஜெயக்குமார்
★ கணிதம்: இரா. அருட்செல்வம், கனகசுந்தரம், மகேந்திரன்
★ ஆங்கிலம்: தெய்வதவபாலன், M. A, ஹரி, ஜெயஜெனோளிபவரன்
★ தமிழ்: பாலா, ஞானதிருக்கேஸ்
★ சமூகக்கல்வி
★ வர்த்தகம்: ராஜன்
★ சைவசமயம்: கணேஸ்

ஆரம்பம்: 05 - 12 - 1992 சனி 8 00 காலை
விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
[இ-38[illegible]]

## கலை, வர்த்தக கல்லூரி

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

ஆண்டு 9, 10, 11
பிரிவுகள்

சனி, ஞாயிறு } 1-00 — 6-00
செவ், வியாழ } 3-00 — 6-00

எமது ஆசிரியர் குழு:
விஞ்ஞானம் — திரு. இரா. செல்வவடிவேல்
கணிதம் — திரு. நிமலநாதன்
சமூகக்கல்வி — திரு. வேலா
தமிழ் — திரு. ஞானதிருக்கேதீசன்
ஆங்கிலம் — திரு. T சௌந்தர-பாண்டியன்.

ஆரம்பம்:
05-12-1992
1-00 மணி
[இ-38[illegible]]

## கீன் கல்வி நிலையம்

பலாலி வீதி, திருநெல்வேலி.

கல்வியாண்டு - 1993
ஆண்டு 4 முதல் O/L வரை
புதிய வகுப்புகள் ஆரம்பம்: 05-12-1992
சனி 4 மணி

ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — | வாமதேவன், கருணாகரன் |
| தமிழ் | — | புலவர் சிவா, திருச்செல்வன் |
| சமூகக்கல்வி | — | குணசிங்கம், சுகுமார் |
| ஆங்கிலம் | — | கதிர்காமநாதன், சந்திரமௌலி |
| வர்த்தகம் | — | ஸ்ரீ |

[இ-3923]


## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 14 — 12 — 1924
உதிர்வு: 04 — 12 — 1985

### அமரர் E. K. சண்முகநாதன்

(ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர்)

ஆண்டுகள் ஏழு ஆனாலும்
ஆறிடுமோ உம் பிரிவு
ஆண்டுகள் ஆயிரம் சென்றாலும்
ஆறாது உம் நினைவு.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், உறவினர்.

[5608]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்படைத் தளபதி கொலையை அடுத்து

# கைதான தமிழ் இளைஞர்களை விடுவிக்க ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, டிச. 4

கடந்த இரு வாரங்களாக கொழும்பு மாநகரில் கைது செய்யப்பட்ட வட பகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களை — அவர்கள் போதிய ஆதாரங்களைச் சமர்ப்பிக்கும் இடத்து உடனடியாக விடுதலை செய்யும்படி ஜனாதிபதி பிரேமதாஸா பொலீஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

கொழும்பு மாநகர பிரதி மேயர் திரு. வி. கணேசலிங்கம் — கைதான தமிழ் இளைஞர்களின் விவகாரம் பற்றி நேரடியாக முறையிட்டதைத் தொடர்ந்து, பொலீஸ்மா அதிபருக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குற்றமற்றவர்கள் என்று கருதப்படும் சகலரையும் விடுதலை செய்யும்படி ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

(த-ஏ)

## இனப்பிரச்சினை தீர்வுக்கு முஸ்லிம்கள் தடையில்லை

### அமைச்சர் ஹமீது சொல்கிறார்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் முஸ்லிம்கள் தடையாக இருக்கவில்லை.

அமைச்சர் சாகுல் ஹமீது பேருவளையில் கடந்த செவ்வாய் நடந்த கல்லூரி பரிசளிப்பு விழா ஒன்றில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

முஸ்லிம்கள் தாம் விரும்பிய அரசியல் கட்சிகளுக்கு ஆதரவளித்து வந்தார்கள். எவ்வாறாயினும், தேசியப் பிரச்சினைகள் எழும்போது அவர்கள் அரசியல் விசுவாசத்தைப் பொருட்படுத்தாது கருத்தொருமைப்பாடு காண முயல வேண்டும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

(த-ஏ)

## நெல் வயல்களில் எரிபந்த நோய்

சாவி. வட்டுக்கோட்டை கிராமங்களில் உள்ள நெல் வயல்களில் பரவலாக எரிபந்த நோய் தாக்கம் காணப்படுகின்றது. இந்நோயால் பாதிக்கப்படும் வயல்களின் நெல் விளைச்சல் பெருமளவில் பாதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

எனவே விவசாயிகள் இப் பங்கசு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு பென்லெட் பங்கச நாசினியை 1 அவுன்ஸ் 10 கலன் நீரில் கலந்து ஏக்கருக்கு 60 கலன் அல்லது கினோசான் 1 அவுன்ஸ் 6 கலன் நீரில் கலந்து ஏக்கருக்கு 60 கலன் கலவையை விசுறுமாறும் கமநல சேவை நிலைய விவசாய போதனாசிரியர் அறிவிக்கின்றார்.

(த - 12)

## கிராம அபிவிருத்திச்சங்க பதிவுகள் யாவும் ரத்து

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் வரும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கான பதிவுகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டு மீளப் புனரமைக்கப்பட உள்ளன.

மேற்படி சங்கங்களுக்கான புதிய யாப்பின் பிரகாரம் தற்போது செயற்படும் மற்றும் செயற்படாதிருக்கும் அனைத்து சங்கங்களின் பதிவுகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இவ் ஆண்டு ஜூன் மாதம் முதல் இச்சங்கங்கள் புதிய யாப்பின் பிரகாரம் மீண்டும் புதுப்பித்து பதிவு செய்யப்பட வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே உள்ள சங்கங்களும், புதிதாக சங்கம் அமைக்க விரும்புவோரும் இம்மாத இறுதிக்குள் பதிவு செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கு யாழ். பிரதேச செயலக பிரிவுக்கான கிராம அபிவிருத்தி அலுவலகருடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

(த)

## சம்பளம் வழங்கவில்லை

தென்மராட்சி, டிச. 4

யாழ்ப்பாணம், கைதடி அரச வடிசாலைக் கட்டுத்தாபன ஊழியர்களுக்கு நான்கு மாதச் சம்பளம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

(த-117)

---

### யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை பழைய மாணவிகள்

யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையில் கல்வி பயின்ற, 31-01-1974க்கு முன் பிறந்த பழைய மாணவிகள் கொண்ட சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் 05-12-1992 அன்று பி. ப 4.00 மணிக்கு நடைபெற உள்ளது. இந்நிகழ்வுக்கு பழைய மாணவிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— அதிபர்.

[23491]

---

சன்மார்க்கசபை — குரும்பசிட்டி

இரசிகமணி, இலக்கியச் 'செல்வர்

கனக. செந்திநாதனின்

### பதினைந்தாவது நினைவு தினம்

இடம்: சம்பன் கோட்டம், நல்லூர்

காலம்: 06—12—1992 ஞாயிறு காலை 9 மணி

தலைவர்: கலாகேசரி ஆ. தம்பித்துரை

நினைவுப் பேருரை

மரபின் முன்னிலையில் இரசிகமணி

கவிஞர் இ. முருகையன் அவர்கள்

### கருத்தரங்கு

இன்றைய சூழ்நிலை - மக்கள்நலன் - அறிவியல்-படைப்பாளிகள்

ஏ. ரி. பொன்னுத்துரை, வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தன், ஐ. சாந்தன், செம்பியன் செல்வன்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். ★

க. விஸ்வநாதன்,

பிரசார செயலாளர்.

[23464]

## தென்னங்கன்று விநியோகம்

முறிகண்டி, டிச. 4

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாய பீடத்தின் விலங்கு வேளாண்மைத் துறையால் மூன்றரை வருடத்தில் காய்க்கக்கூடிய சி. ஆர். டி. 65 இன தென்னங்கன்றுகள் விரைவில் விநியோகிக்கப்படவுள்ளன.

தற்போது 5 ஆயிரம் நாற்றுக்கள் மேடையில் இருப்பதாகவும் தேவையானவர்கள் காலதாமதம் இன்றி உடனடியாக விலங்கு வேளாண்மை துறையுடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

(த-97)

## தென்மராட்சியில் மலேரியா

தென்மராட்சி, டிச. 4

தென்மராட்சிப் பகுதியில் கடந்த மாதத்தில் மட்டும் இருநூறுக்கும் மேற்பட்டோர் மலேரியாக் காய்ச்சலினாலும், குருதிச்சோகை நோயினாலும் பாதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை இரத்த பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இத்துடன் வயிற்றோட்ட நோயினால் நாற்பதுக்கு மேற்பட்ட குழந்தைகள் பாதிக்கப்பட்டு வார்ட்டில் அனுமதிக்கப்பட்டதாகவும் நூற்றுக்கு மேற்பட்டோர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(த-117)

## சீனி விநியோகம்

அரியாலை, டிச. 4

யாழ். மலநோக்கு கூட்டுறவுச்சங்கம் தனது எல்லைக்குட்பட்ட மக்களுக்கு பங்கீட்டு அட்டைக்கு ஒரு கிலோ சீனி முப்பத்தைந்து ரூபாவாக விநியோகித்து வருகிறது.

இதேவேளை—

யாழ். நகரில் உள்ள வெளிக் கடைகளில் சீனி நாற்பது ரூபாவாக விற்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(த-17)

---

### ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 18 | 04 |
| — | — |
| 11 | 12 |
| — | — |
| 1936 | 1987 |

### அமரர் இ. பஞ்சாட்சரம்

[அருள்முருகன் நகைமாளிகை, 96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்]

திதி: 09 — 12 — 1992

அன்பின் திருவுருவாய், அறிவின் கடலாய், பாசத்தின் உறைவிடமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய், அந்தி பகலாய் அயராது உழைத்து வாழ வைத்த எங்கள் அன்புத் தெய்வமே! ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்ற அன்பின் அப்பாவே! உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்பு உள்ளங்கள்.

மனைவி, மக்கள், மருமகன், பேர்த்தி.

கரம்பை,
சாவகச்சேரி.

[23480]

---

உ

அருள்மிகு

### கரைப்பிரான் ஆதி விநாயகர் தேவஸ்தானம்

ஆனைக்கோட்டை.

### உற்சவ மூர்த்தி விநாயகர் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்

காலம்: 04—12—1992 வெள்ளிக்கிழமை

நேரம்: பகல் 12-20க்கு மேல் 12-55வரை

★ பிரதம குரு:
சிவாகம கிரியா ஜோதி
சிவஸ்ரீ சு. கைலாசநாதக் குருக்கள்
(வண்-சிவன் கோவில் பூஜா பரம்பரை - ஆனைக்கோட்டை)

தொடர்ந்து
"நூல் வெளியீட்டு விழாவும்
ஸ்தபதி பட்டமளிப்பு விழாவும்"

★ நூல்: "வைதிக சற்றிய வந்தனம்"

★ வரவேற்புரை:
பிரதிஷ்டா ரத்தினம்
சிவஸ்ரீ க. குகதாஸக் குருக்கள்

★ தலைமை உரை:
கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
(தலைவர் இந்து நாகரிகத்துறை யாழ். வளாகம்)

★ ஆய்வுரை:
"தத்துவ வித்தகர்"
பிரம்மஸ்ரீ சோம நிர்மலேஸ்வரசர்மா

★ சிறப்புரை:
சொல்லின் செல்வன்
பிரம்மஸ்ரீ பா. சர்வேஸ்வர சர்மா
திரு. மா. தியாகராஜா (சட்டத்தரணி)

★ வெளியீட்டாளர் உரை:
சிவஸ்ரீ சு. கைலாசநாதக் குருக்கள்

★ நூல் முதல் பிரதி பெறுபவர்:
"வேதாகம ஞான பாஸ்கரன்"
சிவஸ்ரீ நா. மஹாதேவக் குருக்கள்
(தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்)

"சிற்ப சாஸ்திர பிரவீணா" என்னும் பட்டம் பெறுபவர்
விஸ்வப் பிரம்மஸ்ரீ க. இராஜா (மேசன்)
(சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்)
ஆலய சார்பில் பட்டம் வழங்குபவர்
"ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்"
(நல்லை குருமகா சந்நிதானம்)

நன்றியுரை: "காலவிநோதன்" சிவஸ்ரீ சோ. சண்முகநாதக் குருக்கள்

அன்பர்கள், அடியார்கள் யாவரையும் மேற்படி விழாவில் பங்குபற்றுமாறு அன்புடன் வேண்டுகிறோம்

இங்ஙனம்

[23492] சோம. சிவகுமார சர்மா (ஆதின அர்ச்சகர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய் காவிகளை ஒழிக்க மாநகரசபையில் புதிய பிரிவு

யாழ்ப்பாணம், டிச. 4

யாழ் மாநகரசபைப் பகுதியில் நுளம்பு, இலையான், எலி, கரப்பொத்தான் போன்ற நோய் காவிகளை அழிப்பதற்கென புதிதாக "கட்டுப்பாட்டுப் பிரிவு" (Vector Control Unit) ஒன்று யாழ். மாநகரசபையால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இம் மாத இறுதியில் இருந்து இப்பிரிவு செயற்பட ஆரம்பிக்கும்.

இதன் அடிப்படையில் சுகாதார உத்தியோகத்தர்கள் வீடுகள் தோறும் விஜயம் செய்வர் என்றும்—

அதற்கு வசதியாக ஒவ்வொரு வீட்டிலும் "வெளிக்கள ஊழியர் விட்டுத் தரிசிப்பு விபரத் திரட்டு" அட்டை ஒன்று வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மக்கள் நலன் கருதி மேற்கொள்ளப்படும் இந்தப் பணிக்கு வரியிறுப்பாளர்கள் அனைவரதும் ஒத்துழைப்பும் கோரப்பட்டுள்ளது.

(இ-162-5)

## இடம்பெயர்ந்த மாணவருக்கு விசேட பரீட்சை நிலையம்

### அனுமதி கோருகிறார் பணிப்பாளர்

எதிர் வரும் 7 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சையில் தோற்றவிருக்கும் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு விசேட பரீட்சை நிலையம் அமைக்க அனுமதி தருமாறு பரீட்சை ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் வானொலிச் செய்தி மூலம் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்து அனுமதி அட்டை கிடைக்காதவர்களும் பரீட்சையில் தோற்றுவதற்கு விசேட நிலையம் அமைக்க அனுமதி தருமாறும் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## 96 ஆம் ஆண்டளவில் ஆயிரம் பேர் எய்ட்ஸால் பாதிக்கப்படலாம்

கொழும்பு, டிச. 4

1996 ஆம் ஆண்டில் இலங்கையில் எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகவலை எய்ட்ஸ் நோய்த் தடுப்புப் பணிகளின் தலைவர் டாக்டர் காமினி ஜயகொடி வெளியிட்டார்.

எய்ட்ஸ் நோயைப் பரப்பும் எச். ஐ. வி வைரஸினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 1996 இல் 12 ஆயிரமாக அதிகரிக்கும் என்றும் —

2000 ஆவது ஆண்டில் இந்த எண்ணிக்கை ஒரு லட்சமாகி விடும் என்றும் அவர் கூறினார்.

(இ-ஏ)

## ஏகாதசி விழா

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை சனிக்கிழமை கார்த்திகை ஏகாதசி விரத விழா நடைபெறவுள்ளது.

இம்மாதம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை கந்தஷஷ்டி சோமவார விரத நிகழ்ச்சிகளும், 30 ஆம் திகதி புதன்கிழமை விநாயகர் ஷஷ்டியும் நடைபெறும்.

(அ-51)

## வயோதிபர் காயம்

தாவடிச் சந்தியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இனந்தெரியாத வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்தார்.

சுமார் 65 வயது மதிக்கத்தக்க இவர் தலையில் படுகாயமடைந்து சுயநினைவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## குழாய்க் கிணறு

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சகல உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுக்கும் ஒரு குழாய்க் கிணறு அமைக்கும் செயல் திட்டம் ஒன்றை சர்வோதய அமைப்பு ஆரம்பித்துள்ளது.

(த-80)

**விவசாய...**

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய ஏற்ற விளைவை பெற முடியாதிருந்தது.

நெற்செய்கை மற்றும் சிறுதானிய மரக்கறி செய்கைகளின் உற்பத்தி புள்ளிவிபரங்கள் சேகரித்த பின்னர், விசேட திட்டங்கள் தீட்டி விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். செயலக புள்ளிவிபர சேகரிப்பு கிளையின் அதிகாரிகள் இந்த புள்ளிவிபரங்களை சேகரித்து வருகின்றனர்.

(த-3)

**இராணுவத்திற்...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலவீனப்படுத்தி சில உயர் அதிகாரிகள் கிளர்ச்சி ஒன்றை நடத்தக்கூடும் என்ற அச்சம் நிலவியது.

ஆனால் கொப்பேகடுவவின் கொலையை விசாரிக்க சுயேச்சையான சர்வதேச விசாரணைக் குழு நியமிக்க இணங்கியதன் மூலம் கிளர்ச்சி இராணுவச் சதி என்பன தற்காலிகமாகத் தடுக்கப்பட்டு விட்டன; தவிர்க்கப்பட்டு விட்டன என்று அரசியல் அவதானிகளில் பலர் கொழும்பில் கருத்துத் தெரிவித்தனர்.

கொப்பேகடுவ கொலையை வைத்து அரசியல் லாபம் தேட முயன்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முயற்சியையும் அரசாங்கம் முறியடித்து விட்டதாகவும்—

அதன் மூலம் தெற்கில் தோன்றவிருந்த அரசியல் நெருக்கடியையும் அரசு தவிர்த்துவிட்டதாகவும் அவதானிகள் தெரிவித்தனர்.

**அடையாள...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிடிப்பு கல்லூரி அதிபர், உதவி அரச அதிபர் ஆகியோரினால் அத்தாட்சிப்படுத்திய புகைப்படங்களுடனேயே பரீட்சைக்கு சமூகம் தரவேண்டும் என்றும் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

பரீட்சை எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகப் போகிறது. சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் உதவி அரச அதிபர் பணிமனைகள் இயங்குவதில்லை. அப்படியானால் பரீட்சார்த்திகள் ஒரு நாளில் எப்படித் தமது ஆள் அடையாளத்தை அத்தாட்சிப்படுத்துவது? எவ்வாறு பரீட்சைக்குத் தோற்றுவது என்ற கஷ்ட நிலை உருவாகி உள்ளது.

பாடசாலை மாணவர்கள் தமது பாடசாலை அதிபரைக் கொண்டு புகைப்படத்தில் அத்தாட்சிப்படுத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளரிடம் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். ஏற்கனவே சில பாடசாலைகள் இந்த நடைமுறையைக் கையாண்டுள்ளன.

(அ-ஓ-3)

## சுத்தக் காற்றை சுவாசிக்க சூழலெல்லாம் மரம் நடுவோம்

## மரண அறிவித்தல்கள்

### இராசரெத்தினம் கணேசலிங்கம் [கணேசு]

புங்குடுதீவு 7 ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது யாழ்ப்பாணம் இல. 200, கண்டி வீதி, அரியாலையில் வசித்தவருமான இராசரெத்தினம் கணேசலிங்கம் 03 - 12 - 1992 நேற்றுக் காலமாகி விட்டார். அன்னார் இராசரெத்தினம் - நல்லம்மாவின் அன்பு மகனும், புஷ்பராணி, மகேஸ்வரி, மணிமேகலாதேவி, மகாலிங்கம், கனகரெத்தினம், சண்முகலிங்கம், யோகசாந்தா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04 - 12 - 1992) வெள்ளிக்கிழமை காலை 9. 30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. ஜெயக்கொடி

(23496)

### திருமதி இராசம்மா (ஞானம்)

புங்குடுதீவு 1 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கொக்குவிலில் வசித்தவருமாகிய திருமதி இராசம்மா 03-12-1992 இல் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய அதிபர் திரு. கதிர்காமு (செல்லத்தம்பி)யின் அன்பு மனைவியும், பத்மாதேவி, சவுந்தராதேவி (ஆசிரியை), திருமுருகன் (பிரான்ஸ்), இரத்தினதேவி (ஜேர்மனி) ஆகியோரின் தாயாரும், மு. பாலசுப்பிரமணியம் (இளைப்பாறிய அதிபர், வவுனியா), சங்கரராசா (ஆசிரியர்), வசந்தமாலா (பிரான்ஸ்), அருள்நேசன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற பொன்னம்மா, தம்பிராசா (இளைப்பாறிய இலிகிதர்), தாமோதரம்பிள்ளை (இளைப்பாறிய இலிகிதர், மலேசியா), மகேஸ்வரி, பசுபதிப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்) ஆகியோரின் சகோதரியும், காலம்சென்ற திரு. திருமதி முத்தையா, திரு. திருமதி தனிநாயகம், திரு. திருமதி சதிரேசு ஆகியோரின் சம்பந்தியும், சுரேசன், சுதர்சன், சபேசன், சஜீவன், கஜன், டயானா, லயபரணி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை 04-12-1992 வெள்ளிக்கிழமை இன்று காலை 9 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பத்மாதேவி
(மகள்)

72/18 பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்.
(23497)

## மரண அறிவித்தல்கள்

### இராசையா சிந்துராஜா (சரவணை)

(பிரபல வர்த்தகர் கொழும்பு)

சரவணையை பிறப்பிடமாகக் கொண்டவரும் 15/3, ஓடைவேளை வதிவிடமாகக் கொண்டவருமாகிய இராசையா சிந்துராஜா 02- 12- 1992 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. இராசையா, திருமதி நல்லம்மா இராசையா அவர்களின் அன்பு மகனும், பர்வதவர்த்தினியின் அன்புக் கணவரும், ரதீஸ் (பிரான்ஸ்), ரமேஸ் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தந்தையும், விவேகானந்தன் (ஜேர்மன்), சிவானந்தன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ரவீந்திரன், ரமணானந்தன் (பாலன்), ஜெயசெல்வி குலசிங்கம், சுந்தரானந்தன் (சுவிஸ்), ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி ஜே. ரதீஸின் அன்பு மாமனாரும், சிந்துஜாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 06- 12- 92 - 103 1/2, மகாவித்தியாலய மாவத்தை கொழும்பு- 13 இல் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சி. சுபராஜ்
(பெறாமகன்)

15/3, ஓடைவேள்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(23499)

### திருமதி கந்தையா ஞானசவுந்தரி

திருமதி கந்தையா ஞானசவுந்தரி காலமானார். அன்னார் அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் இ. வே. கந்தையா அவர்களின் அருமை மனைவியும், சதீஸ்வரன் (கனடா), கேதாரநாதன் (ஜேர்மனி), நித்தியானந்தன் (அவுஸ்திரேலியா), இயாமளா பாலசுப்பிரமணியம் (கனடா), காலஞ்சென்ற நிர்மலாசபாரத்தினம், விமலாபரிபூரணானந்தன் (U.K), சாந்திமதி சிவசீலன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அருமைத் தாயாரும், பாலசுப்பிரமணியம், சபாரத்தினம், பரிபூரணானந்தன், சிவசீலன், செந்தாமரை ஆகியோரின் மாமியும், மகேஸ்வரன், அமுதலிங்கம், நகுலேஸ்வரன், ஜெகதீஸ்வரன், தனபாலசிங்கம், மதி, ஞானப்பூங்கோதை ஆகியோரின் சகோதரியும், மதன்மோகன், கோபிரமணன், நவநீதன், வாசுதேவன், சாரங்கன், கேசவன், தினேஸ், நரேஸ், சசீவன், சாமினி, செந்தூரன், செபாணி ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (4 - 12 - 92) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. வே. கந்தையா
(கணவர்)

திருப்பதி
அச்சுவேலி.
(23500)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 04-12-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org